RNI-N0: TNTAM/2021/83936




# மாலை தந்தி

MALAI THANTHI

தமிழால் வெல்வோம்

DAILY EVENING

மாலை நாளிதழ்

Postel Regd. No: TN/5/SVA/2023-2025




சிவகங்கை | மலர்-4 | இதழ்-46 | 17 பிப்ரவரி | திங்கள்கிழமை | malaithanthi2020@gmail.com | 4 பக்கங்கள் | விலை ரூ.5

## புதுடெல்லி ரயில் நிலையத்தில் கூட்ட நெரிசலில் சிக்கி 18 பேர் உயிரிழந்துள்ள சம்பவம்

புதுடெல்லி, பிப்.17



புதுடெல்லி ரயில் நிலையத்தில் கூட்ட நெரிசலில் சிக்கி 18 பேர் உயிரிழந்துள்ள சம்பவம் வருத்தமளிக்கும் செய்தியாக அமைந்துள்ளது. டெல்லி ரயில் நிலையத்தில் 13 மற்றும் 14வது நடைமேடைகளில் உள்ள ரயில்களின் தாமதத்தால் கூட்டம் நிரம்பி வழிந்துள்ளது. கும்பமேளாவுக்கு செல்லும் பயணிகள் 12வது நடைமேடையில் அளவுக்கு அதிகமாக குவிந்துள்ளனர்.

பிரயாக்ராஜ் செல்லும் ரயில் 16வது நடைமேடைக்கு வரும் என்று கடைசி நேரத்தில் வெளியான அறிவிப்பால் பயணிகள் முண்டியடித்துக் கொண்டு, ஏற்கனவே கூட்டம் நிரம்பி வழிந்துள்ள 13, 14வது நடைமேடைகளைக் கடந்து சென்றபோது பெரும் குழப்பம் ஏற்பட்டு உயிர்ச்சேதத்திற்கு வழிவகுத்துள்ளது.

ரயில்வே நிர்வாகம் அளிக்கும் வசதிக்கும், மக்களின் தேவைக்கும் இடையிலுள்ள இடைவெளி தான் இந்த கூட்ட நெரிசல். டெல்லி ரயில் நிலையத்தில் அதிகப்படியான மக்கள் குவிந்துள்ளனர். ஒரு மணி நேரத்திற்கு 1,500 முன்பதிவில்லா டிக்கெட்டுகளை கவுன்டர்களில் விநியோகித்துள்ளனர்.


இந்தளவுக்கு டிக்கெட்டுகள் விற்பனையாகும்போதே உயரதிகாரிகள் சுதாரித்துக் கொண்டு மக்களின் தேவைக்கேற்ப ரயில்களின் எண்ணிக்கையை அதிகரித்திருக்க வேண்டும். அதைச் செய்யவில்லை. இப்படியொரு அசம்பாவித சம்பவம் நடந்தபிறகு இரவு 10 மணிக்கு மேல் 4 சிறப்பு ரயில்களை பிரயாக்ராஜுக்கு இயக்கி கூட்டத்தை வெளியேற்றியுள்ளனர். இதை முன்பே செய்திருந்தால், 4 குழந்தைகள் உள்ளிட்ட 18 உயிர்களை பலி கொடுத்திருக்க வேண்டிய அவசியம் ஏற்பட்டிருக்காது.

நம் அரசு நிர்வாகமும், அதிகாரிகளும் இன்னும் விழிப்படையவில்லை என்பதையே இதுபோன்ற சம்பவங்கள் உணர்த்துகின்றன. கும்பமேளா நடைபெறும் பிரயாக்ராஜில் ஏற்பட்ட கூட்ட நெரிசலில் கடந்த மாதம் 30 பேர் உயிரிழந்தனர். கடந்த ஜூலை மாதம் உத்தரப்பிரதேச மாநிலம் ஹாத்ரஸில் போலே பாபா பொதுக்கூட்டத்தில் ஏற்பட்ட நெரிசலில் 121 பேர் உயிரிழந்தனர். இவை வெறும் எச்சரிக்கை மணிமட்டுமே. இதுபோன்ற சம்பவங்களில் இருந்து என்ன பாடங்களை நாம் கற்றுக் கொள்கிறோம் என்பதே இப்போது நம்முன் உள்ள கேள்வி.

நாட்டின் மக்கள்தொகை 142 கோடியை எட்டி, உலகின் மிகப்பெரிய ஜன நெருக்கடியான நாடாக இந்தியா மாறியுள்ளது. அதற்கேற்க நமது சிந்தனையும், செயல்பாடுகளும் மாற வேண்டும். 100 ஆண்டுகளுக்கு முன்பிருந்த கட்டமைப்புகள், செயல்பாடுகள் இன்றைய காலகட்டத்திற்கு பொருந்தாது. நாட்டின் மிகப்பெரும் போக்குவரத்து வசதியாக உள்ள ரயில்வே நிர்வாகம் மக்கள்தொகை பெருக்கத்தைக் கணக்கில் கொண்டு அதற்கு ஈடுகொடுக்கும் வகையில் வசதிகளை உருவாக்க வேண்டும்.

மக்களின் தேவைகளுக்கு ஏற்ப ரயில் போக்குவரத்தை அதிகரிக்க வேண்டும். நடைமேடைகள், படிக்கட்டுகள், போக்குவரத்து வசதிகள், அவசர கால வசதிகள், அடிப்படை கட்டுமானங்கள் என அனைத்திலும் 142 கோடி எண்ணிக்கையை மனதில் நிலைநிறுத்தி பிரமாண்டமாக உருவாக்க வேண்டும். அதேபோன்று, மக்கள் கூட்டம் எங்கு, எப்படி குவியும் என்பது காவல்துறைக்கு தெரியாததல்ல. முக்கிய நிகழ்வுகளின்போது மக்கள் கூடும் இடங்களில் கூட்டத்தின் அளவைக் கணித்து, அரசு நிர்வாகத்துடன் இணைந்து கூட்டத்தை ஒழுங்குபடுத்து வதற்கான முன்னேற்பாடுகளைச் செய்வதும் காவல்துறை யின் கடமை.

## டெல்லி நில அதிர்வு: 4.0 ரிக்டருக்கே கட்டிடங்கள் பயங்கரமாகக் குலுங்கியது ஏன்?




புதுடெல்லி: தலைநகர் டெல்லி மற்றும் அதன் சுற்றுவட்டாரப் பகுதிகளில் இன்று (பிப்.17) அதிகாலை 5.36 மணி அளவில் நில அதிர்வு ஏற்பட்டது. டெல்லியை மையமாகக் கொண்டு வட இந்தியா முழுவதும் இந்த நில அதிர்வு உணரப்பட்டதாக தேசிய நில அதிர்வு ஆய்வு மையம் தெரிவித்துள்ளது. பூமிக்கு அடியில் 5 கி.மீ. ஆழத்தில் இந்த பாதிப்பு ஏற்பட்டுள்ளது என்பதும் உறுதியாகி உள்ளது.

நில அதிர்வின் தாக்கம் 4.0 ரிக்டர் என்றாலும் கூட கட்டிடங்கள் மிகப்பெரிய அளவில் குலுங்கியதால் டெல்லிவாசிகள் கடும் அச்சத்தில் உள்ளனர். ‘இது போல இதற்கு முன்பு உணர்ந்தது இல்லை. கட்டிடங்கள் பயங்கரமாகக் குலுங்கின’ என்று காசியாபாத் வாசி ஒருவர் ஊடகப் பேட்டியில் கூறியுள்ளார். இதுபோன்ற பாதிப்பினை ஏற்படுத்தும் நில அதிர்வுக்கு புவியியல் நிபுணர்கள் ‘ஆழமற்ற நிலநடுக்கம்’ ( shallow earth-quake ) எனக் குறிப்பிடுகின்றனர். இதனைப் பற்றி சற்றே விரிவாகப் பார்ப்போம்.

ஆழமற்ற நிலநடுக்கம் என்றால் என்ன? ஆழமற்ற நிலநடுக்கமானது (shallow earth-quake ) பூமியின் மேற்பரப்பை ஒட்டிய பகுதியில் மையம் கொண்டிருக்கும். அதாவது பூமிக்கு கீழ் 5 முதல் 10 கிலோ மீட்டர் ஆழத்திலேயே மையம் கொண்டிருக்கும். இதனாலேயே இவை வழக்கமாக அதிக ஆழத்தில் மையம் கொண்டிருக்கும் நிலநடுக்கத்தை விட அதிக பாதிப்புகளை ஏற்படுத்துகின்றன.

நிலநடுக்கத்தின் ஆழத்தைப் பொறுத்து புவியியல் நிபுணர்கள் அதனை வகைப்படுத்துகின்றனர். அதன்படி பூமிக்கு அடியில் 0 முதல் 70 கி.மீ ஆழம் வரை மையம் கொண்ட நிலநடுக்கங்களை ஆழமற்றவை அல்லது நடுத்தரமான நிலநடுக்கம் என்றும், 70 முதல் 300 கிமீ அழம் வரையில் மையம் கொள்ளும் நிலநடுக்கங்களை ஆழமானவை என்றும், 300 கிலோமீட்டரையும் கடந்த ஆழத்தில் மையம் கொள்பவற்றை மிக ஆழமான நிலநடுக்கம் என்றும் வரையறுத்து வைத்துள்ளனர். இதன்மூலம் டெல்லியில் ஏற்பட்ட நில அதிர்வு பூமிக்கு அடியில் 5.5 கி.மீ ஆழத்தில் மையம் கொண்டதால், இதனை ஆழமற்றது, அதிக பாதிப்பை ஏற்படுத்தக் கூடியது என்று நாம் வகைப்படுத்தலாம்.

இந்தோனேசியா உதாரணம்: இத்தகைய, அதிக பாதிப்பை ஏற்படுத்தக்கூடிய ஆழமற்ற நிலநடுக்கத்துக்கு கடந்த 2022 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் இந்தோனேசியாவில் ஏற்பட்ட 5.6 ரிக்டர் அளவிலான நிலநடுக்கத்தை உதாரணமாகக் கூறலாம். இந்த நிலநடுக்கத்தில் 160 பேர் உயிரிழந்தனர். பல கட்டிடங்கள் தரைமட்டமாகின.

அமெரிக்க புவியியல் ஆய்வு மையமானது, “இத்தனை ரிக்டருக்கு மேல் பதிவாகும் நிலநடுக்கம்தான் அதிக பாதிப்பை ஏற்படுத்தும் என்றெல்லாம் உறுதியாகக் கூறவிட முடியாது. நிலநடுத்தின் பாதிப்பு என்பது அது பூமியில் எத்தனை ஆழத்தில் மையம் கொள்கிறது, எந்த மாதிரியான மண்தன்மை கொண்ட நிலத்தில் அது ஏற்படுகிறது, அந்தப் பரப்பில் கட்டிடத்தின் உறுதித் தன்மை என்ன போன்ற பல காரணிகளையும் பொறுத்ததே அமைகிறது.” என்று தெரிவித்துள்ளது.

குண்டு வெடிப்பு போன்ற பாதிப்பு.. நிலநடுக்க பாதிப்பின் வீரியம் அதன் சக்தியைத் தாண்டி, அதன் மையப் புள்ளி, அதன் ஆழம் ஆகியனவற்றைப் பொறுத்தே அமைகின்றன. நிலநடுக்கம் பூமியின் ஆழத்திலும் மையம் கொள்ளலாம், நிலப்பரப்பின் அருகேயும் மையம் கொள்ளலாம். அந்த வகையில் ஆழமற்ற நிலநடுக்கங்கள் / நில அதிர்வுகள் ரிக்டரில் குறைந்த அளவில் இருந்தாலும் கூட அதன் பாதிப்பு அதிகமாக அமைந்து விடுகிறது.

ஆழமான நிலநடுக்கங்களில் இருந்து வரும் நில அதிர்வு அலைகள் மேற்பரப்பில் அதிக தூரம் பயணிக்க வேண்டும், வழியில் ஆற்றலை இழக்கின்றன. இதனாலேயே இத்தகைய நில அதிர்வுகளால் கட்டிடங்கள் குலுங்குவது அதிகமாக இருக்கிறது. இதனை ஒரு பெரிய நகரத்தின் கீழே குண்டு வைத்தால் எப்படி அதிர்வு இருக்குமோ அப்படிக் குலுங்கும் என்று புரிந்து கொள்ளலாம்.

பிரதமர் மோடி அறிவுறுத்தல்: இதற்கிடையில் பிரதமர் மோடி தனது எக்ஸ் தள பதிவில் “டெல்லி மற்றும் அதன் அருகிலுள்ள பகுதிகளில் நில அதிர்வு உணரப்பட்டது. அனைவரும் அமைதியாக இருக்கவும், பாதுகாப்பு முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளைப் பின்பற்றுமாறு அதிகாரிகள் நிலைமையை உன்னிப்பாகக் கண்காணித்து வருகின்றனர்” எனக் கூறியுள்ளார்.

## “இந்திய ராஜதந்திரத்துக்கு இது ஒரு சோதனை!” ‘கைவிலங்கு’ விவகாரத்தில் ப.சிதம்பரம் கருத்து

புதுடெல்லி, பிப்.17



“அமெரிக்காவில் இருந்து நாடு கடத்தப்பட்டு இன்று இந்தியாவுக்கு வர இருப்பவர்களின் கைகள் விலங்கிடப்பட்டும், கால்கள் சங்கிலிகளால் கட்டப்பட்டும் இருக்குமா? இது இந்திய ராஜதந்திரத்துக்கு ஒரு சோதனை” என்று முன்னாள் மத்திய அமைச்சரும், காங்கிரஸ் மூத்த தலைவருமான ப.சிதம்பரம் விமர்சித்துள்ளார்.

இது குறித்து அவர் இன்று வெளியிட்டுள்ள எக்ஸ் பதிவில், “சட்டவிரோதமாக குடியேறியவர்களை திரும்ப அழைத்துவரும் 2வது அமெரிக்க விமானத்தின் மீதே அனைவரின் பார்வையும் இருக்கும். நாடு கடத்தப்பட்டவர்கள், கைவிலங்கிடப்பட்டு, அவர்களின் கால்கள் சங்கிலிகளால் கட்டப்படுமா? இது இந்திய ராஜதந்திரத்துக்கு ஒரு சோதனை,” என்று குறிப்பிட்டுள்ளார்.


அமெரிக்காவில் உரிய ஆவணங்கள் இன்றி தங்கியிருந்த 119 இந்தியர்கள் விமானப் படைக்கு சொந்தமான 2 விமானங்களில் நாடு கடத்தப்படுகின்றனர். இந்த 2 விமானங்கள் 119 இந்தியர்களையும் ஏற்றிக்கொண்டு இன்று இரவு பஞ்சாப் மாநிலம் அமிர்தசரஸில் உள்ள குரு ராம் தாஸ் சர்வதேச விமான நிலையத்தை வந்தடையும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

அமெரிக்காவிலிருந்து நாடு கடத்தப்படுபவர்களில் அதிகபட்சமாக 67 பேர் பஞ்சாப் மாநிலத்தை சேர்ந்தவர்கள். இதனைத் தொடர்ந்து ஹரியாணா (33), குஜராத் (8), உத்தர பிரதேசம் (3), மகாராஷ்டிரா (2), கோவா (2), ராஜஸ்தான் (2) இமாச்சல் மறறும ஜம்முகாஷ்மீர் (தலா ஒருவர் ) ஆகிய மாநிலங்களைச் சேர்ந்தவர்களும் அமெரிக்காவிலிருந்து இந்தியாவுக்கு நாடு கடத்தப்பட்டுள்ளனர் என்று அதிகாரிகள் தெரிவித்தனர்.

முன்னதாக, 104 இந்தியர்கள் அடங்கிய முதல் குழு, அமெரிக்காவில் இருந்து கடந்த 5ம் தேதி அமிர்தசரஸ் நகருக்கு வந்தது. அவர்கள் கைவிலகிடப்பட்டும், கால்களில் சங்கிலியால் கட்டப்பட்டும் கொண்டுவரப்பட்டனர். இது தேசிய அளவில் மிகப் பெரிய அதிர்வலையை ஏற்படுத்தியது. இந்நிலையில், பிரதமர் மோடி தனது அமெரிக்க அரசுமுறைப் பயணத்தை நிறைவு செய்ததன் பின்னணியில் இன்று இரண்டாவது குழு வர உள்ளதால் அவர்கள் எவ்வாறு அழைத்து வரப்படுவார்கள் என்ற கேள்வி முக்கியத்துவம் பெற்றுள்ளது.

## கேஜ்ரிவாலின் ‘கண்ணாடி மாளிகை’ குறித்த விசாரணைக்கு மத்திய ஊழல் கண்காணிப்பு ஆணையம் உத்தரவு: பாஜக

புதுடெல்லி, பிப்.17



டெல்லி முதல்வராக கேஜ்ரிவால் வசித்து வந்த அரசு பங்களாவை அலங்கரிக்க செலவிட்ட தொகை தொடர்பாக விசாரணை நடத்த மத்திய ஊழல் கண்காணிப்பு ஆணையம் டெல்லி அரசின் பொதுப்பணித் துறைக்கு உத்தரவிட்டுள்ளதாக பாஜக தலைவர் விஜேந்தர் குப்தா தெரிவித்தார்.

டெல்லி முதல்வராக இருந்த அரவிந்த் கேஜ்ரிவால் 2015 முதல் கடந்த ஆண்டு அக்டோபர் முதல் வாரம் வரை வசித்து வந்த அரசு பங்களாவில் பல்வேறு மாற்றங்கள் செய்யப்பட்டு அது ‘கண்ணாடி மாளிகை’ போல மாற்றப்பட்டதாகவும் இதற்காக அருகில் இருந்த நிலங்கள் சட்டவிரோதமாக கையகப்படுத்தப்பட்டதோடு, அதன் உள்புற அலங்காரத்துக்காக மக்களின் வரிப்பணம் கோடிக்கணக்கில் செலவிடப்பட்டதாகவும் பாஜக குற்றம் சாட்டி வருகிறது. தேர்தல் நேரத்தில், பிரதமர் நரேந்திர மோடியும் இத்தகைய குற்றச்சாட்டை முன்வைத்தார்.

இந்நிலையில், இந்த விவகாரம் தொடர்பாக இன்று (பிப். 15) பேசிய பாஜக தலைவர் விஜேந்தர் குப்தா, “கேஜ்ரிவால் வசித்து வந்த எண்.6, ஃபிளாக்ஸ்டாஃப் சாலை பங்களாவை விரிவுபடுத்துவதற்காகவும் அலங்கரிப்பதற்காகவும் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகளில் விதிமீறல்கள் மற்றும் ஊழல் நடந்துள்ளதாக நான் மத்திய ஊழல் கண்காணிப்பு ஆணையத்திடம் ஏற்கனவே புகார்கள் அளித்திருந்தேன். அந்த புகார்கள் தொடர்பாக அறிக்கை தாக்கல் செய்ய மத்திய ஊழல் கண்காணிப்பு ஆணையம், டெல்லி அரசின் பொதுப்பணித் துறைக்கு உத்தரவிட்டது. தற்போது அந்த அறிக்கையின் அடிப்படையில், விரிவான விசாரணைக்கு உத்தரவிட்டுள்ளது.” என தெரிவித்தார்.

டெல்லி ரோஹினி தொகுதியில் இருந்து புதிதாக தேர்ந்தெடுக்கப்பட்ட பாஜக எம்எல்ஏவான விஜேந்தர் குப்தா, மத்திய ஊழல் கண்காணிப்பு ஆணையத்திடம் அளித்த முதல் புகாரில், “8 ஏக்கர் பரப்பளவில் ஆடம்பரமான மாளிகையை கட்டுவதற்காக கேஜ்ரிவால் கட்டிட விதிகளை மீறி உள்ளார். ராஜ்பூர் சாலையில் உள்ள பிளாட் எண்கள் 45, 47 மற்றும் இரண்டு பங்களாக்கள் (8ஏ மற்றும் 8பி, ஃபிளாக் ஸ்டாஃப் சாலை) உள்ளிட்ட அரசு சொத்துக்கள் இடிக்கப்பட்டு புதிய இல்லத்தில் இணைக்கப்பட்டன. இதில், தரை பரப்பளவு விதிமுறைகள் மீறப்பட்டுள்ளன. சரியான திட்ட ஒப்புதல்கள் பெறப்படவில்லை.” என்று குற்றம் சாட்டி இருந்தார்.

தனது இரண்டாவது புகாரில், ஃபிளாக் ஸ்டாஃப் சாலையில் உள்ள 6வது பங்களாவின் புதுப்பித்தல் மற்றும் உட்புற அலங்காரத்தில் மிகப்பெரிய நிதி முறைகேடுகள் நடந்துள்ளதாகவும், வரி செலுத்துவோரின் பணத்திலிருந்து கோடிக்கணக்கான ரூபாய் செலவழிக்கப்பட்டதாகவும் குப்தா குற்றம் சாட்டி இருந்தார்.

## மயிலாடுதுறை படுகொலைக்கு செல்வப்பெருந்தகை கண்டனம்

ஸ்ரீபெரும்புதூர், பிப்.17



காஞ்சிபுரம் மாவட்டம், ஸ்ரீபெரும்புதூரில் தமிழக காங்கிரஸ் கட்சியின் நிர்வாகிகளுக்கு அடையாள அட்டை வழங்கும் நிகழ்ச்சி இன்று (பிப்.15) நடைபெற்றது. இதில் அகில இந்திய காங்கிரஸ் செயலாளர் சூரஜ் ஹெக்டே, தமிழக காங்கிரஸ் கமிட்டி தலைவர் செல்வப்பெருந்தகை ஆகியோர் கலந்துகொண்டு ஸ்ரீபெரும்புதூர் நகர காங்கிரஸ் நிர்வாகிகளுக்கு அடையாள அட்டை வழங்கினார். பின்னர் செய்தியாளர்களை சந்தித்த செல்வப்பெருந்தகை கூறியது: “மயிலாடுதுறையில் நடந்த இரட்டைக் கொலை குற்றவாளிகளை போலீஸார் இரும்புக் கரம் கொண்டு அடக்க வேண்டும்.

தமிழக முதல்வர் சட்டம் ஒழுங்கை காப்பாற்றும் வகையில் செயல்படுகிறார். அதிகாரிகளும் முதல்வருக்கு உறுதுணையாக இருந்து கயவர்களை தண்டிக்க வேண்டும் என்று அவர் கூறினார்.

## ‘பாதுகாப்பற்ற மாடல்’ அரசை நடத்தும் ஸ்டாலின் மயிலாடுதுறை சம்பவத்தில் இபிஎஸ் விமர்சனம்

சென்னை, பிப்.17



“மக்களுக்கு முற்றிலும் பாதுகாப்பற்ற மாடல் அரசை நடத்தும் முதல்வர் ஸ்டாலின், தனது ஆட்சியில் எந்த தவறுமே நடக்காதது போல், போட்டோஷூட், வீடியோஷூட் என வலம் வருவது தமிழ்நாட்டு அரசியலில் புதிய விந்தை” என எதிர்க்கட்சி தலைவர் இபிஎஸ் தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் தனது எக்ஸ் பக்கத்தில், “மயிலாடுதுறை அருகே சாராய விற்பனையைத் தட்டிக் கேட்ட இரண்டு இளைஞர்கள் படுகொலை செய்யப்பட்டுள்ளதாக வந்துள்ள செய்திகள் மிகுந்த அதிர்ச்சி அளிக்கின்றன. எந்த தவறு குறித்து புகார் அளித்தாலும், புகார் அளிப்பவர்கள் மிரட்டப்படுவதும், கொல்லப்படுவதும் என, மக்களுக்கு முற்றிலும் ஹிஸீ உணீயீமீ விஷீபீமீ அரசை நடத்தும் திமுக முதல்வர் ஸ்டாலின், தனது ஆட்சியில் எந்த தவறுமே நடக்காதது போல், போட்டோஷூட், வீடியோஷூட் என வலம் வருவது தமிழ்நாட்டு அரசியலில் புதிய விந்தை.

முதல்வர் ஸ்டாலினுக்கு போட்டோஷூட்டுக்கு அரிதாரம் பூசிக்கொள்வதில் இருக்கும் கவனம், தனக்குதானே புகழ்ந்து கொள்ளும் இருக்கும் ஆர்வம், என்றைக்காவது ஆட்சி நடத்துவதில் இருந்தது உண்டா? இதில், இவரின் கட்டுப்பாட்டில் இருக்கும் காவல்துறை, இந்த கொலை வாய்த் தகராறு, முன்விரோதம் காரணமாக நடந்தது என பத்திரிகை செய்தி வெளியிடுகிறது. வழக்கை விசாரிப்பதற்கு முன்னமே காவல்துறையே தீர்ப்பை எழுதுவது தான் ஸ்டாலின் மாடலா?

இளைஞர்கள் கொலையின் காரணத்தை தீர விசாரிப்பதுடன், தொடர்புள்ளோர் மீது கடுமையான சட்ட நடவடிக்கை எடுக்க வேண்டுமென ஸ்டாலின் மாடல் திமுக அரசை வலியுறுத்துகிறேன். விளம்பரங்களில் மட்டும் இருக்கும் கவனத்தை , மக்கள் பணியில் சிறிதாவது செலுத்துமாறு முதல்வரைக் கேட்டுக்கொள்கிறேன்” எனத் தெரிவித்துள்ளார்.





தேனி மாவட்டம் போடிநாயக்கனூர் திருமலாபுரம் நாடார் மேல்நிலைப் பள்ளி எதிரில் புதியதாக துவங்கியுள்ள ஸ்ரீ போகர் ஸ்ரீ வராகி அம்மன் கார் பார்க்கிங் திறப்பு விழா நடைபெற்றது. திறப்பிழாவிற்கு போடிநாயக்கனூர் ஜமீன்தார் வடமலைராஜைய பாண்டியன் , அருள்மிகு பரமசிவன் கோவில் அறங்காவலர், போடிநாயக்கனூர் நகர் நலசங்க தலைவர் தலைமையில் ரிப்பன் வெட்டி தொடங்கிவைத்தார். அருள்மிகு ஸ்ரீ முருகன் கந்த சஷ்டி திருக்கல்யாண அன்னதான அறக்கட்டளை தலைவர் செண்பகராஜன் மற்றும் முக்கிய நிர்வாகிகளும் உறுப்பினர்களும் ஆன்மீக அன்பர்களும் கார்பார்க்கிங் திறப்பு விழாவிற்கு கலந்து கொண்டனர்.

# கிழக்கு தாம்பரம் விசிரிமல் புக் ராஜ் போரா அரசினர் மகளிர் மேல்நிலைப் பள்ளியில் 43 ஆம் ஆண்டு விழா





தாம்பரம் பிப் 17

தாம்பரம் அடுத்த சேலையூரில் கிழக்கு தாம்பரம் விசிரிமல் புக் ராஜ் போரா அரசினர் மகளிர் மேல்நிலைப் பள்ளியில் 43ஆம் ஆண்டு விழா தலைமை ஆசிரியர் ஈஸ்வரி தலைமையில் நடைபெற்றது

இதில் சிறப்பு அழைப்பாளராக 5வது மண்டல குழு தலைவர் எஸ்.இந்திரன், எழுத்தாளர் மற்றும் பேச்சாளர் சரிதா ஜோ, செங்கல்பட்டு உடற்கல்வி ஆய்வாளர் திருவாளர் செல்வன் ஆகியோர் கலந்து கொண்டு பள்ளியில் படிக்கும் மாணவிகளுக்கு எவ்வாறு நடந்து கொள்ள வேண்டும் ஊக்குவிக்கும் வகையில் நல்ல அறிவுரைகளை வழங்கினார்கள் அதனை தொடர்ந்து பள்ளியில் போட்டிகளில் வெற்றி பெற்ற மாணவிகளுக்கு சான்றிதழ்கள் பரிசு பொருட்கள் வழங்கப்பட்டது இந்த நிகழ்ச்சியில் 46வது மாமன்ற உறுப்பினர் ரமணி ஆதிமூலம், 48வது மாமன்ற உறுப்பினர் சசிகலா கார்த்தி, லைன் கிளப் சுரேஷ்குமார், எஸ்.எம்.சி.தலைவர் நல்லது லிங்கம், பி.டி.ஏ தலைவர் உஷா ரமேஷ் மற்றும் ஆசிரியர்கள் அலுவலக பணியாளர்கள் மாணவிகள் பொதுமக்கள் உட்பட பலர் கலந்து கொண்டு நிகழ்ச்சியை சிறப்பித்தனர்





கடலூர் மாவட்டம் வடலூரில் ஜோதிஞான மருந்து அறக்கட்டளையின் சார்பில் மருத்துவர் தயவுத்திரு ஜகத்குரு தலைமையில் சிறப்பு முகாம் நடைபெற்றது இதில் மக்களுக்கு பசுமை புரட்சி விழிப்புணர்வு ஏற்படுத்தியும் ஞான மூலிகை புத்தகம் வழங்கியதோடு பஞ்சகவியம் தயாரிப்பது குறித்த விளக்கங்களும் அளிக்கப்பட்டது இதில் ஜோதி ஞான மருந்து அறக்கட்டளை தன்னார்வலர்கள் பலரும் உடன் இருந்தனர்..

# கொடைக்கானல் மேல்மலை கிராமத்தில் துணை காவல் நிலையம் திறப்பு





கொடைக்கானல் பிப்17

திண்டுக்கல் மாவட்டம் கொடைக்கானல் மேல் மலை பகுதிகளான பூம்பாறை, மன்னவன்னூர் கிளாவரை, கூக்கால், குண்டுபட்டி, கவுஞ்சி போன்ற பதினைந்து கிராமங்கள் உள்ளன இந்நிலையில் பல வருடங்களாக அப்பகுதியில் காவல் நிலையம் அமைத்து தர வேண்டும் என்று பொதுமக்கள் கோரிக்கை வைத்து வந்துள்ளனர்

மேல்மலை கிராமங்களில் சுற்று வட்டார கிராமங்களில் எந்த ஒரு குற்ற செயலில் நடைபெற்றாலும் பிரச்சனை களுக்கு 25 கிலோமீட்டர் முதல் 50 கிலோ மீட்டர் தொலைவு வரைக்கும் வந்து கொடைக்கானல் காவல் நிலையத்தில் புகார் அளிக்க வேண்டிய சூழ்நிலை உள்ள நிலையில் மாவட்ட காவல் கண்காணிப்பாளர் பிரதீப் அவர்கள் மற்றும் கொடைக்கானல் காவல் கண்காணிப்பாளர் மதுமதி காவல் ஆய்வாளர் பாஸ்கரன் தலைமையில் சோதனைச் சாவடி மற்றும் துணை காவல் நிலையத்தை திறந்து வைத்தனர்

இதனைத் தொடர்ந்து வாரத்திற்கு ஒரு முறை மனுக்கள் பெறப்பட்டு அதற்கான நடவடிக்கை எடுக்கப்படும் என்று கூறினார்.

மேலும் இந்த துணை காவல் நிலையம் கூடிய விரைவில் முழு காவல் நிலையமாக அமைக்க உள்ளதாகவும் காவல் கண்காணிப்பாளர் பிரதீப் அவர்கள் தெரிவித்தார்

மேலும் இப்பகுதியில் தற்போது திறக்கப்பட்ட துணை காவல் நிலையம் அப்பகுதியில் நடைபெறும் குற்ற செயல்கள் கட்டுக்குள் வரும் என்று கூறப்படுகிறது. மேலும் சுற்றுலாப் பயணிகள் மதுபோதையில் வாகனங்களை சோதனை செய்யவும் போதை காளான் ,கஞ்சா போதைப் பொருட்கள் கடத்தும் கும்பலை சுலபமாக கண்காணிக்கும் வகையில் இந்த சோதனை சாவடி அமைக்கப்பட்டுள்ளது என பொதுமக்களிடையே மகிழ்ச்சியை ஏற்படுத்துகிறது..


# நன்மங்கலம் ஏரி பாதுகாப்பு குழு சார்பில் பொதுமக்களுக்கு விழிப்புணர்வு




நன்மங்கலம் பிப் 17

செங்கல்பட்டு மாவட்டத்தில் உள்ள அனைத்து ஏரிகளையும் பாதுகாக்க வேண்டும் என்று குறிப்பாக தாம்பரம் மாநகராட்சி உள்ள நன்மங்கலம் ஏரியை சுத்தம் செய்து குப்பைகளை அகற்றி பாதுகாக்க வேண்டும் என்று நன்மங்கலம் ஏரி பாதுகாப்பு குழுவினர் ஜலரக்ஷனா, சிட்லப்பாக்கம் ரைசிங் குழு, எக்ஸ்னோரா, இஃபா, கல்லூரி மாணவர்கள் எஸ்.ஐ.வி.டி, எம் சி சி ஜெயின், பிரின்ஸ் காலேஜ் சார்பில் இன்று செம்பாக்கம் சீயோன் பள்ளி வளாகத்தில் இருந்து காலை 7 மணிக்கு தன்னார்வலர்கள், சமூக ஆர்வலர்கள், பொதுமக்கள், நல சங்கங்கள், நன்மங்கலம் ஏரி பாதுகாப்பு குழு உறுப்பினர்கள் 500க்கும் மேற்பட்டவர்கள் கலந்து கொண்டு ஊர்வலமாக நன்மங்கலம் ஏரி மற்றும் அதனை சுற்றியுள்ள குடியிருப்பு பகுதி வழியாக ஏரிகளை பாதுகாப்போம் ஏரிகளில் குப்பைகளை கொட்டுவதை தடுத்து நிறுத்துவோம், போன்ற வாசகம் அடங்கிய அட்டைகள் ஏந்தி கொண்டு கோஷங்கள் எழுப்பியவாறு பொதுமக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தினர். இதில் மூத்த சமூக ஆர்வலர் சந்தானம் அவர்கள் கலந்துகொண்டு ஏரிகளை எப்படி பாதுகாப்பது பற்றி விழிப்புணர்வு ஏற்படுத்தினார். மேலும் விழிப்புணர்வு ஊர்வலத்தில் ஏரியில் சுற்றியுள்ள அனைத்து தன்னார்வலர்கள், அசோசியேஷன் நகர் மற்றும் குடியிருப்பு வாசிகள் என்ஜிஓ மற்றும் கல்லூரி மாணவ, மாணவிகள், சமூக ஆர்வலர்கள் கலந்து கொண்டு நிகழ்ச்சியை சிறப்பித்தனர்.

# திசையன்விளை அருகே பைக்குகள் நேருக்கு நேர் மோதிய விபத்தில், கல்லூரி முதல்வர் மாணவர் உயிரிழப்பு



தூத்துக்குடி பிப்17

தூத்துக்குடி மாவட்டம், சாத்தான்குளத்தைச் சேர்ந்தவர் லிவிங்ஸ்டன் (46). அங்குள்ள கல்வியியல் கல்லூரியில் முதல்வராக பணியாற்றி வந்தார். நேற்று மாலை மன்னார்புரம் விலக்கு வழியாக திசையன்விளைக்கு சென்று கொண்டிருந்தார். எதிரே திசையன்விளையைச் சேர்ந்த கல்லூரி மாணவர் ஜெய்சன் (20), மற்றும் கரன் (23) ஆகியோர் மற்றொரு பைக்கில் வந்து கொண்டிருந்தனர்.

வாழைத்தோட்டம் அருகே இரு பைக்குகளும் நேர் எதிரே மோதி விபத்துக்குள்ளானது. இதில் கல்லூரி முதல்வர் லிவிங்ஸ்டன் மற்றும் மாணவர் ஜெய்சன் ஆகியோர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தனர். படுகாயம் அடைந்த கரன் திருநெல்வேலி அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். இது குறித்து திசையன்விளை காவல்துறையினர் வழக்கு பதிவு செய்து விசாரணை நடத்தி வருகின்றனர்.

# பல்லாவரத்தில் செங்கல்பட்டு மேற்கு மாவட்ட அதிமுக சார்பில் செயல்வீரர்கள், வீராங்கனைகள் ஆலோசனை கூட்டம்



பல்லாவரம் பிப்17

சென்னை அடுத்த பல்லாவரம் தனியார் மண்டபத்தில் செங்கல்பட்டு மேற்கு மாவட்ட கழக அதிமுக சார்பில் செயல்வீரர்கள் வீராங்கனைகள் ஆலோசனை கூட்டம் மேற்கு மாவட்ட செயலாளர் சிட்லப்பாக்கம் இராசேந்திரன் தலைமையில் மாவட்ட கழக துனைசெயலாளரும், முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் ப.தன்சிங் முன்னிலையில் பல்லாவரம் பகுதி செயலாளர் ஜெயபிரகாஷ் மற்றும் மாவட்ட மாணவரணி இணைச்செயலாளர் சந்திரசேகர ராஜா ஏற்பாட்டில் நடைபெற்றது. ஆலோசனை கூட்டத்திற்கு முன்னாள் அமைச்சர் ப.வளர்மதி கலந்து கொண்டு அதிமுக ஒரு பெரிய இயக்கம் இதை யாருவது தொட்டு பார்பவர்கள் கெட்டார்கள் எனவும் வருகின்ற 2026 ல் அதிமுக ஆட்சி வெற்றிபெற்று எடப்பாடியார் தமிழக முதலமைச்சராக இருப்பார் என்றும் இதற்கு மக்களை நேரடியாக சென்று அதிமுக ஆட்சியில் செய்த நலதிட்டங்கள் குறித்து எடுத்து கூறவேண்டும் என தெரிவித்தார்.

ஆலோசனை கூட்டத்திற்கு முன்னாள் ஒன்றிய குழுத் தலைவர் என்.சி.கிருஷ்ணன், முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் கே.என் இராமசந்திரன், முன்னாள் அமைச்சர் டி.கே.எம். சின்னையா, ஒன்றிய செயலாளர் கஜா என்கின்ற கஜேந்திரன், சேலையூர் சங்கர், கஜேந்திரன், அப்புவெங்கடேசன், பகுதி செயலாளர்கள் செழியன், கோபிநாத் சிட்லபாக்கம் மோகன், மதுரபாக்கம் எம்பி மனோகரன், தகவல் தொழில் அணி மாவட்ட செயலாளர் காசி ராஜன், மாமன்ற உறுப்பினர் ஸ்டார் பிரபா, சாந்தகுமார், மகளிர் அணி மாவட்ட இணைச் செயலாளர் அமுதா, முடிச்சூர் ஸ்ரீ பாஸ்கர், மூர்த்தி, திருமலை, கண்ணன், சர்குணம், ரமேஷ், கலைச்செல்வன், பாலாஜி, ஹரி கிருஷ்ணன், கற்பகம் சீனிவாசன், நித்தியா, மண்ணிவாக்கம் சாந்தி புருஷோத்தமன், துளசிங்கம், வார்டு உறுப்பினர் நாகராஜ் உட்பட மாமன்ற உறுப்பினர்கள், தொண்டர்கள் மற்றும் மகளிரணியினர் ஏராளமனோர் கலந்து கொண்டனர்..

## டிவி சீரியல் நடிகை காஞ்சனா 4' படத்தில் இணைந்தாக தகவல்



சென்னை, பிப்.17

ராகவா லாரன்ஸ் நடித்து இயக்கிய 'காஞ்சனா' திரைப்படம் கடந்த 2011ம் ஆண்டு வெளியாகி ரசிகர்களிடையே வரவேற்பை பெற்றது. இதன் தொடர்ச்சியாக 2015ல் 'காஞ்சனா 2'மற்றும் 2019ல் 'காஞ்சனா 3' என அடுத்தடுத்த பாகங்களை ராகவா லாரன்ஸ் இயக்கினார். ஹாரர் காமெடி ஜானரில் உருவான இந்த படங்கள் ரசிகர்களை வெகுவாக கவர்ந்தது.

அதனை தொடர்ந்து ராகவேந்திரா புரொடெக்சன் மற்றும் கோல்டன் மைன் நிறுவனம் தயாரிப்பில் ராகவா லாரன்ஸ் இயக்கத்தில் 'காஞ்சனா 4' உருவாகவுள்ளதாக அதிகாரபூர்வ அறிவிப்பு வெளியானது. இப்படத்தில் பூஜா ஹெக்டே மற்றும் பாலிவுட் நடிகை நோரா பதேகியும் முக்கிய கதாபாத்திரத்தில் நடிப்பதாக கூறப்படுகிறது. இந்த நிலையில், இப்படத்தில்மேலும் ஒரு நடிகை இணைந்திருப்பதாக தகவல் வெளியாகி உள்ளது. அதன்படி, பிரபல சீரியல் நடிகை ஹிமா பிந்து இப்படத்தில் நடிப்பதாக கூறப்படுகிறது.

## 18 வயது குறைவான ஓட்டுநர் உரிமம் இல்லாத வாகனங்கள் நம்பர் பலகை இல்லாத இருசக்கர வாகனங்களை பறிமுதல்




கன்னியாகுமரி பிப்17

கன்னியாகுமரி மாவட்ட காவல் கண்காணிப்பாளர் ஸ்டாலின் உத்தரவுப்படி காவல்துறை காவல் துணை கண்காணிப்பாளர் மகேஷ் குமார். கன்னியாகுமரி உட்கோட்டம் மேற்பார்வையில் கன்னியாகுமரி போக்குவரத்து காவல் ஆய்வாளர் பிரபு. போக்குவரத்து உதவி ஆய்வாளர் ஜெயபிரகாஷ். மற்றும் போக்குவரத்து காவலர்கள் கன்னியாகுமரி ரவுண்டானா மற்றும் ஜீரோ பாய்ண்ட் ,அஞ் சுகிராமம்,மேலகிருஷ்னன்புதூர் பகுதியில் வாகன தணிக்கையின் போது 18 வயதுக்கு குறைவாக ஓட்டுநர் உரிமம் இன்றியும், நம்பர் பலகை இல்லாமலும், தகுந்த ஆவணங்கள் இன்றியும் ஓட்டி வந்த 10 இருசக்கர வாகனங்களை பறிமுதல் செய்து அபராதம் விதித்தனர். பின்னர் ஓட்டுநர் உரிமம் இன்றி வாகனம் ஓட்டிய ஓட்டுநர்கள் அபராதம் விதிக்கப்பட்டு நம்பர் பலகை இல்லாத இருசக்கர வாகனங்களுக்கு உரிய நம்பர் பலகை பொருத்தபட்டும் பின்னர் வாகன ஓட்டிகளுக்கு தக்க அறிவுரைகள் வழங்கி அனுப்பபட்டது.

## பழனியில் கொலை வழக்கில் தப்பி ஓடிய நபருக்கு மாவு கட்டு



பழனி பிப்17

திண்டுக்கல் மாவட்டம் பழனி அடிவாரம் பகுதியில் தனியார் தங்கு விடுதியில் கடந்த 11ம் தேதி தைப்பூசம் அன்று துப்புரவு பணியாளராக பணியாற்றி வந்த காந்தி என்ற பெண்ணை, மர்மநபர் குத்தி கொலை செய்தது தொடர்பாக அடிவாரம் காவல் நிலையத்தில் வழக்கு பதிவு செய்யப்பட்டது.

இதுகுறித்து மாவட்ட எஸ்பி.பிரதீப் உத்தரவின் பேரில் பழனி டிஎஸ்பி. தனஞ் செயன் மேற்பார்வையில் ஆய்வாளர் மணிமாறன் தலைமையில் சார்பு ஆய்வாளர் ராஜகுமாரன் மற்றும் போலீசார் அப்பகுதிகளில் உள்ள சிசிடிவி பதிவுகளை ஆய்வு செய்து தீவிர விசாரணை மேற்கொண்டு மேற்படி சம்பவத்தில் ஈடுபட்டார் பழனி பாலசமுத்திரம் பகுதியை சேர்ந்த ஆனந்த்குமார் தேடிவந்த நிலையில் ரகசிய தகவலும் படி ஒரு இடத்தில் தங்கி இருப்பதாக தெரிந்து கொண்ட காவல்துறை அவரை பிடிக்கச் சென்ற பொழுது நிலை தடுமாறி கீழே விழுந்ததில் அவருக்கு காலம் முடிவு பின்னர் முதல் உதவி செய்து வழக்குப் பதிவு செய்து காவல் நிலையத்திற்கு அழைத்து வந்து வழக்கு பதிவு செய்து சிறையில் அடைக்கப்பட்டனர்..

## மானாமதுரையில் தேரோட்ட பாதையில் உள்ள மழைநீர்க்கால்வாய் உறுதித்தன்மையுடன் அமைக்க சமூக ஆர்வலர் கோரிக்கை



மானாமதுரை பிப்17

சிவகங்கை மாவட்டம், மானாமதுரை நகராட்சியில் உள்ள பிரசித்தி பெற்ற ஆனந்தவல்லிசோமநாதர் கோவில் தேரோட்டம் வருடம் தோறும் சித்திரை மாதம் நடைபெறும் மதுரை முக்கு அருகில் ரதவீதிகள் அமைக்கப்பட்டு வரும் மழைநீர்க்கால்வாய்களை தேரின் சுமை தாங்கும் வகையில் உறுதித்தன்மையுடன் அமைக்க வேண்டுமென பக்தர்களும் பொதுமக்களும் கோரிக்கை விடுத்துள்ளனர்.

மானாமதுரை நகராட்சியில் 27 வார்டுகளில் 60 ஆயிரம் பேர் வசித்து வருகின்றனர். இந்நிலையில், நகராட்சிப்பகுதிகளில் பல்வேறு அடிப்படை பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. ஆண்டுதோறும் சித்திரை மாதத்தில் இங்குள்ள அருள்மிகு ஆனந்தவல்லி ஸ்ரீசோமநாதர் கோவில் தேரோட்டம் விமரிசையாக நடைபெற்று வருகிறது.

இக்கோவிலுத்தா தற்போது 100 டன் எடையில் புதிய தேர் தயாரிக்கப் பட்டுள்ளது. தேரோட்டம் நான்கு ரத வீதி வழியாக செல்லும் போது கோவிலிருந்து புறப்பட்டு உச்சமாகாளி அம்மன் கோவில் வழியாக செல்லும். இந்நிலையில், உச்சமாகாளி அம்மன் கோவில் முன்பு மழைநீர் கால்வாய் அமைக்கப்பட்டு வருகிறது. தேர் செல்லும் போது அதன் பாரத்தை தாங்கும் அளவுக்கு இந்தக்கால்வாய் அமைக்கப்படுகிறதா என்ற சந்தேகத்தை பொதுமக்கள் எழுப்பியுள்ளனர். இப்பணியை எடுத்த ஒப்பந்தகாரர் தேரோட்டம் தடங்கலின்றி செல்லும் வகையில் கால்வாயின் மேலே மூடப்படும் சிமெண்ட் கான்கிரீட் தளத்தை வலிமைமிக்கதாகவும், தேரின் பாரம் தாங்கும் வகையில் அமைக்க வேண்டுமென மானாமதுரை வட்டாட்சியரிடமும், நகராட்சி நிர்வாகத்திடமும் சமூக ஆர்வலர் கீழமேல்குடி முருகன் என்பவர் மனு அளித்தார். எனவே, தேரோட்டம் செல்லும் வழித்தடத்தை தரமான முறையில் அமைக்க வேண்டும் என்பதே அனைத்து தரப்பினரும் எதிர்பார்ப்பாக உள்ளது. என்று சமூக ஆர்வலர் கீழமேல்குடி முருகன் தெரிவித்துள்ளார்..



தமிழ்நாடு நாயுடு மகாஜன சங்கத்தின் சார்பில் மாமன்னர் திருமலை நாயக்கரின் 367 வது நினைவு நாளை முன்னிட்டு மதுரை அரண்மனை வளாகத்தில் உள்ள திருமலை நாயக்கர் திருவுருவச் சிலைக்கு மதுரை மாவட்டத் தலைவர் சப்னா மகாராஜன் தலைமையில் மாலை அணிவித்து மரியாதை செலுத்தினர்.இந்நிகழ்வில் மாநில பொருளாளர் ஆடிட்டர் சீனிவாசன் தலைமை நிலைய அமைப்புச் செயலாளர் டாக்டர் சன்னாசி மாவட்ட செயலாளர் ஜெகநாதன் திருமங்கலம் சரவணன் மன்னர் வாரீஸ் கண்ணன் ராம்குமார் அழகர்சாமி பிரபு சுந்தர் ஆகியோர் கலந்து கொண்டனர்.



மதுரை திருமலை நாயக்கர் மகாலில் சுற்றுலா துறையின் சார்பாக செயல்படுத்தப்பட்டு வரும் பல்வேறு திட்டப் பணிகள் குறித்து சுற்றுலாத்துறை அமைச்சர் ஆர்.ராஜேந்திரன் ஆய்வு மேற்கொண்டார். சுற்றுலாத்துறை உதவி தலைமை மேலாளர் டேவிட் பிரபாகரன். பாலமுருகன் உடன் உள்ளார்.

## நீலகிரி மாவட்டத்தில் மலைப்பாதையில் சிறப்பு குழுவினர் அதிரடி தடை செய்யப்பட்ட பிளாஸ்டிக் பொருள்களுக்கு அபராதம்



குன்னூர், பிப்17

நீலகிரி மாவட்டத்தில் தடை செய்யப்பட்ட பிளாஸ்டிக் பொருட்கள் விற்பனை செய்வதும், அதனை பயன்படுத்துவதும் தொடர்பாக சோதனை மேற்கொண்டு நடவடிக்கை எடுக்கப்படுவதுடன், சுற்றுலா பேருந்துகள் மற்றும் வாகனங்களிலும் ஆய்வு மேற்கொண்டு பிளாஸ்டிக் பொருட்கள் குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்த வேண்டும் என மாவட்ட ஆட்சியர் உத்தரவிட்டதன் பேரில் உள்ளாட்சி அமைப்புகளை சேர்ந்த அதிகாரிகள் குழுவினர் சிறப்பு அதிகாரிகளாக இந்தப் பணிக்கு நியமிக்கப்பட்டு உள்ளனர். அதன்படி கோத்தகிரி பகுதியில் நேற்று மாலை கேத்தி பேரூராட்சி செயல் இயக்குனர் நடராஜ் தலைமையில் கோத்தகிரி பேரூராட்சி அதிகாரிகள் இணைந்து அங்குள்ள மளிகை, காய்கறி, மீன் மற்றும் வணிக நிறுவனங்கள், சுற்றுலா வாகனங்கள், அரசு பேருந்துகளில் அதிகாரிகள் குழுவினர் அதிரடியாக சோதனை மேற்கொண்டதில் 5 1/2 கிலோ தடை செய்யப்பட்ட பிளாஸ்டிக் பாட்டில் மற்றும் பைகள் பறிமுதல் செய்யப்பட்டதுடன் ரூ.26,500 அபராதம் விதிக்கப்பட்டது. தொடர்ந்து இதுபோல் தடை செய்யப்பட்ட பொருட்களை பயன்படுத்தும் கடைகள் மீது கடுமையான நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் எச்சரிக்கை விடப்பட்டுள்ளதுடன், அரசு பஸ்களில் இது போன்ற பொருட்கள் இருப்பது கண்டறியப்பட்டால் சம்பந்தப்பட்ட ஓட்டுநர் மற்றும் நடத்துனர் மீதும் சட்ட ரீதியான நடவடிக்கை மேற்கொள்ளப்படும் எனவும் எச்சரிக்கப்பட்டது.

## சிவகங்கை மாவட்டம் குழந்தைகள் அறிவியல் மாநாட்டில் ஆய்வுக் கட்டுரை சமர்ப்பித்த கல்லல் பள்ளி மாணவர்கள்








கல்லல் பிப்17


சிவகங்கை மாவட்டம் கல்லலில் கடந்த 31 ஆண்டுகளாக மத்திய அரசின் வழிகாட்டுதலின் பேரில் தேசிய குழந்தைகள் அறிவியல் மாநாட்டை தமிழ்நாட்டில் தமிழ்நாடு அறிவியல் இயக்கம் தொடர்ந்து நடத்தி வந்த நிலையில், இந்த ஆண்டு குழந்தைகள் அறிவியல் மாநாட்டை மாவட்ட, மண்டல மற்றும் மாநில அளவில் தானாக முன்வந்து முழு பொறுப்பேற்று நடத்தியது. இதில் இளநிலை மற்றும் உயர்நிலை ஆகிய இரண்டு பிரிவுகளில் பள்ளி மாணவ மாணவிகள் ஒரு குழுவிற்கு இரண்டு பேர் வீதம் தங்கள் ஆய்வு கட்டுரைகளை சமர்ப்பித்தனர். சிவகங்கை மருதுபாண்டியர் பள்ளி வளாகத்தில் கடந்த ஜனவரி 28 ஆம் தேதி நடைபெற்ற மாவட்ட அளவிலான மாநாட்டில் மொத்தம் சமர்ப்பிக்கப்பட்ட 96 ஆய்வுக் கட்டுரைகளில் 38 ஆய்வுக் கட்டுரைகள் கல்லல் முருகப்பா மேல்நிலைப் பள்ளியில் இருந்து சமர்ப்பிக்கப்பட்டது. இந்த ஆய்வு கட்டுரைகளுக்கு இப்பள்ளியின் ஆசிரியர்கள் அனைவரும் வழிகாட்டி ஆசிரியர்களாக செயல்பட்டது குறிப்பிடத்தக்கது. பிப்ரவரி முதல் நாள் தென்காசி அருள்மிகு செந்தில் ஆண்டவர் பாலிடெக்னிக் கல்லூரியில் நடைபெற்ற மண்டல அளவிலான மாநாட்டில் மாவட்டத்திலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்ட 13 ஆய்வுக் கட்டுரைகள் சமர்ப்பிக்கப்பட்டது.

அதில் கல்லல் முருகப்பா மேல்நிலைப்பள்ளியில் இருந்து ஒரு ஆய்வுக் கட்டுரை இறுதிச் சுற்றுக்கு தகுதி பெற்றது . அதாவது, சிவகங்கை மாவட்டத்திலிருந்து மாநில போட்டிக்கு தகுதி பெற்ற ஒரே ஆய்வுக் கட்டுரை இதுதான். பிப்ரவரி 15, 16 ஆம் நாட்களில் புதுக்கோட்டை திருவரங்குளத்தில் உள்ள புஷ்கரம் வேளாண் கல்லூரியில் நடைபெற்ற மாநில அளவிலான போட்டியில் கலந்து கொண்ட மாணவர்கள் இராஜ கணபதி, சரவண பிரவீன் மற்றும் வழிகாட்டி ஆசிரியர் பிரபு ஆகியோருக்கு பணி நிறைவு இஸ்ரோ விஞ்ஞானி இங்கர்சால் மற்றும் விஞ் ஞானி ராஜ்குமார் பரிசு மற்றும் சான்றிதழை வழங்கினர். மாநில மாநாட்டில் கலந்து கொண்ட இவர்களை குழந்தைகள் அறிவியல் மாநாட்டின் மாவட்ட ஒருங்கிணைப்பாளர் சேவற்கொடியோன், மாவட்ட செயலாளர் ஆரோக்கியசாமி, பள்ளி தலைமையாசிரியர் அழகப்பன் பாராட்டினர்.



மக்கள் நீதி மையம் தலைவர் கமல்ஹாசன் அவர்களை நெல்லை மத்திய மாவட்ட திமுக துணைச்செயலாளர் எஸ்.வி.சுரேஷ் மரியாதை நிமித்தமாக சந்தித்து தமிழ் பண்பாட்டு ஆய்வறிஞர் பேராசிரியர் தொ.பரமசிவன் எழுதிய நூல்கள் குறித்தும் , வரலாற்று ஆய்வாளர் தமிழ் பேராசிரியர் வே.மாணிக்கம் எழுதிய பாஞ்சாலங்குறிச்சி வீரசக்கதேவி கோயில் வரலாறும் வழிபாடும் என்ற நூலினை வழங்கினார்கள்.

# நிதி அகர்வால் ஹரி ஹர வீர மல்லு படம்' பற்றிய சுவாரசிய தகவலை பகிர்ந்துள்ளார்



சென்னை பிப்17

தமிழ், தெலுங்கு மற்றும் இந்தி மொழித் திரைப்படங்களில் நடித்து வருபவர் நிதி அகர்வால். இவர் தெலுங்கில் 'சவ்யசாச்சி' திரைப்படத்திலும், தமிழில் 'ஈஸ்வரன்' திரைப்படத்திலும் அறிமுகமானார். ஐஸ்மார்ட் ஷங்கர் மற்றும் கலக தலைவன் உள்ளிட்ட திரைப்படங்களிலும் நடித்திருந்தார். தற்போது இவர் பிரபாஸுடன் 'தி ராஜா சாப்'படத்திலும் , பவன் கல்யாணுடன் 'ஹரி ஹர வீரமல்லு' என்ற திரைப்படத்திலும் நடித்து வருகிறார்.இதில், 'ஹரி ஹர வீரமல்லு' படத்தின் டீசர் மற்றும் முதல் பாடல் ஏற்கனவே வெளியான நிலையில், 'எம்மனச பறிச்சுட்ட'என்ற பாடல் வருகிற 24ம் தேதி மதியம் 3.00 மணிக்கு வெளியாக உள்ளது. இந்நிலையில், ஹரி ஹர வீர மல்லு படம் குறித்த சில சுவாரசியமான தகவல்களை நிதி அகர்வால் பகிர்ந்துள்ளார். இது குறித்து அவர் கூறுகையில் டீசரில் நீங்கள் பார்த்தது ஒரு சிறிய காட்சிதான். படத்தில் நீங்கள் ஆச்சரியப்படும் படியான பல காட்சிகள் உள்ளன. எனது கதாபாத்திரத்திற்கு இப்படத்தில் அதிக முக்கியத்துவம் கொடுக்கப்பட்டுள்ளது. பஞ்சமி எனது சிறந்த கதாபாத்திரம், ஹரி ஹர வீர மல்லு எனது சிறந்த படம்' என்று கூறினார்..

# சிவகங்கையில் சிலம்பம் விளையாட்டு கலைச்சங்கம் இணைந்து நடத்தும் 35 வது மாநில அளவிலான சிலம்பம் போட்டிகள்







சிவகங்கை பிப்.17

சிவகங்கை நகராட்சி ஆர் எம் ஆர் திருமண மண்டபத்தில் சிவகங்கை சிவம் மார்சில் ஆர்ட்ஸ், நேரு யுவகேந்திரா மற்றும் உலக பாரம்பரிய சிலம்பம் விளையாட்டு கலைச்சங்கம் இணைந்து நடத்தும் 35 வது மாநில சிலம்பப் போட்டிகள் நேற்று நடைபெற்றது. இப்போட்டிக்கு மாநில அளவில் இருந்து 21 மாவட்டங்களில் 1000 மேற்பட்ட பள்ளி மாணவ மாணவிகள் மற்றும் கல்லூரி மாணவர்கள் கலந்து கொண்டனர். இப்போட்டிக்கு உலக பாரம்பரிய சிலம்பம் விளையாட்டு கலைச்சங்கம் மாவட்ட செயலாளர் செந்தில் குமார் வரவேற்புரை வழங்கினார்.

தாய் சென்சாய் ராஜசேகரன் ஜப்பான் மற்றும் உலக பாரம்பரிய சிலம்பம் விளையாட்டு கலைச்சங்கம் டெக்னிக்கல் டைரக்டர் ஷேக் இப்ராஹிம் சா தலைமையிலும் ,சிவம் மார்ஷியல் ஆர்ட்ஸ் நிறுவனர் ரென்சி பரமசிவம் மற்றும், தமிழ்நாடு பாரம்பரிய சிலம்ப விளையாட்டு கலைச்சங்கம் தலைவர் அருண்பிரகாசம் மற்றும் நேரு யுகேந்திரா ஒருங்கிணைப்பாளர் பிரவீன் குமார், முன்னாள் ஒருங்கிணைப்பாளர் ஜவகர் முன்னிலையிலும் சிவகங்கை கூடுதல் காவல் கண்காணிப்பாளர் கலை கதிரவன் மற்றும் பிரான்சிஸ் சேவியர் , மாவட்ட விளையாட்டு அலுவலர் ரமேஷ் கண்ணன் சிறப்பு விருந்தினர்களாக கலந்துகொண்டு மாணவச் செல்வங்களுக்கு வாழ்த்துரை வணங்கி போட்டியினை துவக்கி வைத்துள்ளார்கள். மேலும் சிவகங்கை சிவம் மார்ஷல் ஆர்ட்ஸ் தலைவர் சென்சாய் கோபி நன்றியுரை வழங்கினார். மற்றும் இப் போட்டியில் கலந்து கொண்ட மாணவ மாணவியர்களுக்கு ஒற்றைக்கம்பு பிரிவில் வெற்றி கோப்பைகளும் மற்றும் சான்றிதழ்களும் இரட்டை கம்பு பிரிவில் வெற்றி பெற்ற மாணவர்களுக்கு பதக்கங்களும் மற்றும் சான்றிதழ்களும் வழங்கப்பட்டது.

# சொத்துகுவிப்பு வழக்கு முன்னாள் அமைச்சர் சுரேஷ்ராஜன் விடுதலை



அந்தகிராமம் பிப்.17

2002ம் ஆண்டு அதிமுக ஆட்சியில் திமுக முன்னாள் அமைச்சர் சுரேஷ்ராஜன் மீது சொத்து குவிப்பு தொடரப்பட்டது

சொத்துக்குவிப்பு நடைபெற்று வந்த நிலையில் வழக்கில் இருந்து திமுக முன்னாள் அமைச்சர் சுரேஷ் ராஜனை விடுதலை செய்து கன்னியாகுமரி மாவட்ட முதன்மை அமர்வு நீதிமன்றம் தீர்ப்பு அளித்துள்ளது. 1996-2001 ஆண்டுகளில் சுற்றுலா அமைச்சராக இருந்த சுரேஷ் ராஜன் வருமானத்திற்கு அதிகமாக ரூ.17 லட்சம் சொத்து சேர்த்ததாக 2002ல் வழக்குப் பதிவு செய்யப்பட்டது

சுரேஷ்ராஜன் விடுதலை: உற்சாகத்தில் திமுக தொண்டர்கள் மற்றும் ஆதரவாளர்கள் தமிழக சட்டமன்ற தேர்தல் அடுத்த ஆண்டு 2026 நடைபெறுகிறது.தேர்தலுக்கு திமுக ., அதிமுக, பாஜக உள்ளிட்ட அரசியல் கட்சிகள் தயாராகி வருகிறது. ஆளும்கட்சியான திமுக., வரும் தேர்தலில் 200 தொகுதியை கைப்பற்ற வியூகம் வகுத்து அதற்கான பணிகள் நடந்து வருகின்றன. இந்நிலையில் திமுக.,வில் செயல்படாத நிர்வாகிகள் மாற்றி புதிய நிர்வாகிகளை நியமிக்கபட்டு வருகின்றனர்.

ஆறு சட்டமன்ற தொகுதிகளை கொண்ட குமரி மாவட்டத்தில் இரண்டு தொகுதிக்கு ஒரு மாவட்ட செயலாளர் நியமிக்கும் திட்டம் திமுக தலைமையிடம் உள்ளது. இந்நிலையில் முன்னாள் மாவட்ட செயலாளரும் முன்னாள் அமைச்சருமான சுரேஷ் ராஜனுக்கு சொத்து குவிப்பு வழக்கில் இருந்து விடுவித்து வழங்கி நாகர் கோவில் கோர்ட் தீர்ப்பளித்தது. சுரேஷ் ராஜனின் அரசியல் வாழ்க்கையின் முக்கியத்துவம் வாய்ந்த இந்த தீர்ப்பு அவரது ஆதரவாளர்கள் திமுக தொண்டர்கள் மத்தியில் கடும் உற்சாகத்தை ஏற்படுத்தியுள்ளது. திமுக தலைமையிடம் நெருக்கமாக இருக்கும் சுரேஷ் ராஜனுக்கு குமரி மாவட்ட திமுக.,வில் முக்கிய பொறுப்பு விரைவில் அறிவிக்கப்படலாம் என்றும் அவரது ஆதரவாளர்கள் எதிர்பார்க்கின்றனர்.

பொய்வழக்கில் இருந்து விடுதலை செய்யப்பட்ட முன்னாள் அமைச்சர் சுரேஷ் ராஜனை திமுக மாநில வர்த்தக அணி இணை செயலாளர் வக்கீல். தாமரைபாரதி மயிலாடி பேரூராட்சி துணை தலைவர் சாய்ராம், அஞ்சுகிராமம் பேரூராட்சி துணை தலைவர் காந்திராஜ், திமுக நிர்வாகிகள் சுதன் மணி, செல்வின் சதீஷ்குமார், தென் தாமரைக்குளம் பேரூர் செயலாளர் பூவியூர் காமராஜ், கொட்டாரம் பேரூர் செயலாளர் வைகுண்ட பெருமாள், லீபுரம் ஊராட்சி முன்னாள் தலைவர் முத்துசாமி, திமுக கவுன்சிலர் எட்வின் ராஜ் ,வாத்தியார் செல்வக்குமார், மற்றும் பலர் உள்ளனர்

# ஒட்டன்சத்திரம் ஒன்றியத்தில் தூய்மை பாரத இயக்கம் சார்பில் விழிப்புணர்வு





ஒட்டன்சத்திரம், பிப்.17

திண்டுக்கல் மாவட்டம் ஒட்டன்சத்திரம் ஒன்றியத்திற்கு உட்பட்ட ஊராட்சிகளில் தூய்மை பாரத இயக்கம் திடக்கழிவு மேலாண்மை தூய்மை காவலர்கள் தினசரி வீடு வீடாக சென்று குப்பைகளை சேகரிப்பது சம்பந்தமாகவும், பொது மக்களுக்கு மக்கும் குப்பை மக்காத குப்பை என்று தனித்தனியாக பிரித்துக் கொடுப்பதற்கும் எனது குப்பை எனது பொறுப்பு என்பதனை மக்கள் உணர்ந்து செயல்பட வேண்டும் என்பதை வலியுறுத்தியும் ஒட்டன்சத்திரம் ஒன்றியத்திற்கு உட்பட்ட ஊராட்சிகளில் விழிப்புணர்வு நடத்தப்பட்டது.

இவ்விழிப்புணர்வு அம்பிளிக்கை தங்கச்சியம்மாபட்டி அத்திக்கோம்பை லெக்கையன்கோட்டை உள்ளிட்ட அனைத்து ஊராட்சிகளிலும் நடைபெற்றது.

இந்நிகழ்வில் வட்டார ஊராட்சி அலுவலர் வடிவேல்முருகன், கிராம ஊராட்சி அலுவலர் காமராஜ், மண்டல துணை வட்டார வளர்ச்சி அலுவலர்கள் ஈஸ்வரி, சக்திவேல் வட்டார ஒருங்கிணைப்பாளர் கிராம ஊராட்சி செயலர்கள், அம்பிளிக்கை சுப்புராஜ், தங்கச்சியம்மாபட்டி மணிகண்டன், அத்திக்கோம்பை மலர்விழி, லெக்கையன்கோட்டை நல்லையா மற்றும் பொதுமக்கள் கலந்து கொண்டனர்.



மதுரையில் நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை சார்பில் மதுரை திண்டுக்கல் தேனி கரூர் ராமநாதபுரம் சிவகங்கை விருதுநகர் திருநெல்வேலி தூத்துக்குடி தென்காசி மற்றும் கன்னியாகுமரி மாவட்டங்களுக்கு உட்பட்ட. மாநகராட்சிகள் நகராட்சிகள் மற்றும் பேரூராட்சிகளில் செயல்படுத்தப்பட்டு வரும் வளர்ச்சி திட்ட பணிகள் குறித்த ஆய்வுக்கூட்டம் அமைச்சர் கே என் நேரு தலைமையில் நடைபெற்றது. இக்கூட்டத்தில் சட்டமன்ற உறுப்பினர்கள் நாடாளுமன்ற உறுப்பினர்கள் மாநகராட்சி நகராட்சி மற்றும் பேரூராட்சிகளில் தலைவர்கள் செயல் அலுவலர் மற்றும் அரசு உயர் அதிகாரிகள் மாவட்ட ஆட்சித் தலைவர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

# உலக திருக்குறள் கூட்டமைப்பு சார்பாக திருக்குறள் ஒப்புவித்தல் போட்டி:





கல்லல் பிப்17

உலக திருக்குறள் கூட்டமைப்பு சார்பாக சிவகங்கை மாவட்டம் கல்லல் முருகப்பா மேல்நிலைப் பள்ளியில் திருக்குறள் ஒப்புவித்தல் போட்டி நடைபெற்றது. பள்ளி தலைமையாசிரியர் அழகப்பன் தலைமை தாங்கினார். ஆசிரியை அமுதா வரவேற்புரை வழங்கினார். ஆறாம் வகுப்பு முதல் ஒன்பதாம் வகுப்பு வரை உள்ள 18 மாணவ மாணவிகள் இறுதிப் போட்டிக்கு தகுதி பெற்றனர். முதுகலை தமிழாசிரியர் கண்ணதாசன் திருக்குறளின் ஏன் வாழ்வியல் நூலாக போற்றப்படுகிறது என்பதை மாணவர்களிடம் எடுத்துக் கூறினார். ஆசிரியர்கள் மோகன்ராசன், பத்மா, மாரிமுத்து போட்டியாளர்களை வாழ்த்தினர். ஏழாம் வகுப்பில் மாணவி பொன்னழகு முதலிடமும், ஐங்கரன் சஞ்சய் இரண்டாமிடமும், விஜயதரணி மூன்றாமிடமும் பிடித்தனர். எட்டாம் வகுப்பில் ராமன் முதலிடமும் ஸ்ரீராம் சஞ்சீவ் இரண்டாம் இடமும் பிடித்தனர். ஒன்பதாம் வகுப்புக்கான போட்டியில் மாணவி திரிஷா முதலிடம் பிடித்தார். ஆசிரியைகள் கற்பகவல்லி மற்றும் விஜயராணி நடுவர்களாக இருந்தனர். வெற்றி பெற்றவர்களை பாராட்டி பரிசு வழங்கப்பட்டது. உலகத் திருக்குறள் கூட்டமைப்பு மாவட்ட பொறுப்பாளரும், ஆசிரியருமான மாண பிரபு நிகழ்ச்சியை ஒருங்கிணைத்தார்.

Printed , published by A.PONRAJ and printed at "SRI SAAI PRINTERS"No.122,Neethipathi,Rajasekaran Street, vaarasanthai road,Sivaganga and published at 6 a, madurai road Sivaganga, Sivaganga district,Editor A.PONRAJ.8508502161